(4) அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

இ. கேளிக்கை வரி, உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு கேளிக்கை பவ, உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன் வடிவை" பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; பேரவைத் தலைவரவர்களே, சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

ஈ. தமிழ்நாடு பரிசுத் திட்டங்கள் (தடை) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி : தலைவர் அவர்களே, "1979-ஆம் ஆண்டு தமிழ்நாடு பரிசுத் திட்டங்கள் (தடை) சட்ட முன் வடிவை" பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி : தலைவரவர்களே, சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(6) அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம்—விவாதம் தொடர்ச்சி.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, தமிழ்நாட்டிலேயே என்றுமில்லாத அளவிற்குப் போலீசார் ஒரு வேலை நிறுத்தத்தைச் செய்திருக்கின்றனர். இதற்கு அடிப்படைக் காரணம், அரசு அந்த விஷயத்தில் சரியான முறையில் நடந்து கொள்ளாததுதான் என்பது என்னுடைய கருத்து. எத்தனையோ அரசு அலுவலர்களுக்கு வேண்டிய சங்கங்கள் இருந்தும், காவல் துறையைச் சார்ந்தவர்களுக்குச்